**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**

முன்னிலை : **திரு.R.M.மாரிமுத்து, B.A., B.L., L.L.M.,**

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருநெல்வேலி

2025 ம் ஆண்டு அக்டோபர் மாதம் 28 ம் நாள் செவ்வாய்கிழமை

**இ.ஏ.எண்.17/2025 அதன் இ.பி.எண்.79/2021**

**அதன் அ.வ.எண்.67/1992**

ராஜா முத்தையா ... மனுதாரர்/எதிர்மனுதாரர்/ 1 ம் பிரதிவாதி

–எதிர்–

1. ஜானகி ... 1 ம் எதிர்மனுதாரர்/வாதி
2. தனபால் ... 2 ம் எதிர்மனுதாரர்/2 ம் மனுதாரர்

இம்மனு என்முன்பாக 25.10.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.S.ஜவஹர்லால் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றிந்த வழக்கறிஞர் திரு.M.கிருஷ்ணன் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதங்களையும், இரு தரப்பு ஆவணங்களையும் ஆராய்ந்து இந்நீதிமன்றம் ஆய்ந்து வழங்கும்,

**உத்தரவு**

நிறைவேறுதல் மனுவானது உரிமையியல் நடைமுறை விதிகள் 28(2)–ன் கீழ் மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுவின் சுருக்கம்**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கின் 1 ம் பிரதிவாதி என்றும், நிறைவேற்றுகை மனுவின் எதிர்மனுதாரர் என்றும் கூறப்பட்டுள்ளது. மனுதாரர் தரப்பில் கடந்த 17.10.2025 ம் தேதி இந்நீதிமன்றத்தால் நிறைவேற்றுகை

மனுவில் கண்ட தபசில் மனு சொத்தை ஒப்படைப்பதற்கு 28.10.2025ம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. நிறைவேற்றுகை மனுவிற்கு வாய்தா 29.10.2025ம் தேதி போடப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

2.2) மனுதாரர் தரப்பில் நிறைவேற்றுகை மனு பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக சீராய்வு மனு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்ய இருப்பதாலும், உத்தரவின் சான்றிட்ட நகலை பெறுவதற்கு மனு தாக்கல் செய்திருப்பதாலும், நிறைவேற்றுகை மனுவின் அனைத்து நடவடிக்கைகளையும் 2 மாத காலத்திற்கு தடை செய்ய வேண்டுமென்ற மனுவை இம்மனுவுடன் தாக்கல் செய்திருப்பதால் இந்த மனுவை அனுமதிக்க வேண்டுமென்று கூறப்பட்டுள்ளது.

**<u>3) 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரை சுருக்கம்</u>**

3.1) அசல் வழக்கானது 1991ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டது என்றும், மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டு, மாண்புமிகு உச்சநீதிமன்றத்தில் SLP No.15074/2020 மற்றும் 1206/2021 ஆகிய மேல்முறையீடுகள் கடந்த 08.09.2021ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டு விட்டது என்றும், இந்த மனுதாரரும், சில்வியா எபனேசரும் சேர்ந்து பல மனுக்களை தாக்கல் செய்து, நிறைவேற்றுகை மனுவில் உத்தரவு பிறப்பிக்க விடாமல் தடை செய்கிறனர் என்றும், நீதிமன்றத்தின் தீர்ப்பின் பலனை அனுபவிக்க விடாமல் இடையூறு செய்ய வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே, இம்மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கூறப்பட்டுள்ளது.

4) இரு தரப்பிலும் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் முன்னிறுத்தவில்லை.

5) **<u>இந்த மனுவை பொறுத்தவரை தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியவாறு நிறைவேற்றுகை மனுவினை முன்கூட்டியே எடுக்க (Advance Hearing) அனுமதி அளித்து உத்தரவிட வேண்டுமா? இல்லையா? என்பதேயாகும்.</u>**

6) இரு தரப்பு வாதுரை கேட்கப்பட்டது. இரு தரப்பு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

7). இம்மனுவின் மனுதாரர் நிறைவேற்றுகை மனுவின் எதிர்மனுதாரர் ஆவார். இம்மனுவின் எதிர்மனுதாரர்கள் நிறைவேற்றுகை மனுவின் மனுதாரர்கள் ஆவார்கள். நிறைவேற்றுகை மனுவானது மனு தபசில் சொத்தைப் பொறுத்து சுவாதீனம் கோரி மனுதாரருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

8). மனுதாரர் நிறைவேற்றுகை மனுவை 28.10.2025 ம் தேதியிலிருந்து அதற்கு முன்பு எடுக்க வேண்டும் என்று உ.வி.மு விதிகள் பிரிவு 28(2) ன் கீழான மனு தாக்கல் செய்துள்ளார்.

9) நிறைவேற்றுகை மனுவில் டெலிவரி வாரண்ட் பிறப்பிக்கப்பட்டு நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், மனுதாரர் தரப்பில் நிறைவேற்றுகை மனு பிறப்பிக்கப்பட்ட உத்தரவிற்கு எதிராக சீராய்வு மனு மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தாக்கல் செய்ய இருப்பதாலும், உத்தரவின் சான்றிட்ட நகலை பெறுவதற்கு மனு தாக்கல் செய்திருப்பதாலும், நிறைவேற்றுகை மனுவின் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்கக் கோரி கட்டளை 21 விதி 26 சிபிசி–ன் கீழ் மனுவை இம்மனுவுடன் சேர்த்து தாக்கல் செய்துள்ளதாலும், இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது தான் நீதியின் நலனுக்கு சிறந்ததாக அமையும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**இறுதியில் இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவு தொகை இல்லை.**

இந்த உத்தரவானது என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 28ம் நாளாகிய இன்று என்னால் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

MARIMUTHU R MUNIYASAMY
order uploaded on 28.10.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.10.28 18:38:26 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

1). மனுதாரர் தரப்பு சாட்சிகள் : இல்லை
2). மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை
3). எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் : இல்லை
4). எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

MARIMUTHU R MUNIYASAMY
order uploaded on 28.10.2025.
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.10.28 18:38:32 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
திருநெல்வேலி.

மு.மா.உ.நீ, திருநெல்வேலி.
இ.ஏ.எண்.17/2025
இன்
இ.பி.எண்.79/2021
இன்
அ.வ.எண்.67/1992
வரைவு/நேரிய உத்தரவு
நாள் – 28.10.2025